
https://puthusudar.lk/ puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

20TH OCTOBER 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 102





## அரசியல்வாதிகளால் பிழையான வழியில் ஈட்டப்பட்ட

# சொத்துக்களை அரசுடமையாக்குவதற்கு நடவடிக்கை

அரசியல்வாதிகள் மற்றும் ஏனையவர்களால் முறையற்ற விதத்தில் சம்பாதிக்கப்பட்ட சொத்துக்களை அரசுடைமையாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று அரச தகவல்கள் கூறுகின்றன.

இதற்காக புதிய நிறுவனம் ஒன்றை அமைப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது என்று அந்தத் தகவல்கள் மேலும் கூறுகின்றன.

உள்நாட்டில் மாத்திரம் அல்ல வெளிநாடுகளிலும் இவர்கள் இவ்வாறான விதத்தில் சொத்துக்களை சேர்த்து வைத்திருந்தால் அவற்றையும் இந்த நிறுவனம் அரசுடைமையாக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிறுவனங்கள் வெளிநாடுகள் பலவற்றில் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## முன்னாள் ஜனாதிபதிகளிடம் 29 அரச வாகனங்கள்

முன்னாள் ஜனாதிபதிகளிடம் 29 அரச வாகனங்கள் உள்ளன என்றும் அவற்றை மீள கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவற்றுள் டீஆறு ரக வாகனங்கள் 5 உம் அம்பியூலன்ஸ் ஒன்றும் அடங்குகின்றன என்றும் கூறப்படுகிறது.

மஹிந்த ராஜபக்சவிடம் 8 வாகனங்களும் ரணில் விக்ரமசிங்கவிடம் 11 வாகனங்களும் உள்ளன என்று கூறும் அரசு அவற்றை மீள ஒப்படைக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

## கருப்பு பணம் தொடர்பில் விசாரணை ஆரம்பம்

பண முதலைகளால் ஒளித்து வைக்கப்பட்டிருக்கும் கருப்பு பணம் தொடர்பில் விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளதாக அரச தரப்பில் இருந்து அறிய முடிகிறது.

இது தொடர்பில் மனோரா மற்றும் பண்டோரா ஆவணத்தில் வெளியிடப்பட்ட பெயர் விபரங்கள் தொடர்பிலும் விசாரணை நடத்தப்படும் என்று அறிய முடிகிறது.






## அமைச்சர்களின் உத்தியோகபூர்வ இல்லங்கள் இன்னும் கையளிக்கப்படவில்லை

கொழும்பு 7 இல் அமைந்துள்ள முன்னாள் அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அரச உத்தியோகபூர்வ இல்லங்களை காலி செய்யுமாறு சம்பந்தப்பட்ட முன்னாள் அமைச்சர்களுக்கு அரசால் அறிவிக்கப்பட்டபோதிலும் அவை இன்னும் கையளிக்கப்படவில்லை என்று அரச தகவல்கள் கூறுகின்றன.

மொத்தம் 34 இல்லங்களில் 29 இல்லங்களின் சாவிகள் இன்னும் அரசிடம் ஒப்படைக்கப்படவில்லை.

புது சுடர்
www.puthusudar.lk
2024 OCTOBER 20 - SUNDAY

# மன உறுத்தலே இல்லையா?

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிடம் 16 அரச வாகனங்கள். ரணில் விக்ரமசிங்கவிடம் 11 வாகனங்கள்.

ஒரு நாட்டின் தலைவருக்கு இத்தனை வாகனங்கள் எதற்கு ? தான் பயணிப்பதற்கு ஒரு வாகனமும் பாதுகாப்பு படையினர் உடன் வருவதற்கு ஒரு வாகனமும் இருந்தால் போதும்தானே.

ஆனால்,16 வாகனங்கள் என்றும் 11 வாகனங்கள் என்றும் வைத்திருப்பது –அவற்றைப் பாவிப்பது எந்த விதத்தில் நியாயம்.

தெரிந்துகொண்டே இப்படி மக்களின் சொத்துக்களை வீண் விரயம் செய்திருக்கிறார்கள் இந்தத் தலைவர்கள்.

இப்படி தேவைக்கு அதிகமாக பாவிக்கிறோமே என்று கொஞ்சமேனும் இவர்களுக்கு மன உறுத்தல் வருவதில்லையா?

எப்படி வரும்.மக்களுக்கு சேவை செய்வதற்காக பதவியேற்றிருந்தால்தானே வரும்.இவர்கள் எல்லோரும் சுகபோகத்தில் வாழ்வதற்காக அந்தப் பதவியைப் பயன்படுத்தியவர்கள்.

பதவியில் இருக்கும்போதுதான் அப்படி என்றால் பதவி இழந்த நிலையிலும் அப்படித்தான்.அரசிடம் வாகனங்களை ஒப்படைப்பதற்கு விருப்பமில்லை.

தான் அந்த வாகனங்கள் அனைத்தையும் பாவிப்பதை நியாயப்படுத்துகிறார் மஹிந்த. போரை முடித்து வைத்த தனக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாகவும் அதற்காகவே அத்தனை வாகனங்களையும் பாவிப்பதாகவும் கூறுகிறார்.

இது எந்த வகையில் நியாயம். பாதுகாப்பு அச்சுறுத்தல் இருந்தால் பாதுகாப்பைத்தானே பலப்படுத்த வேண்டும் வாகனங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் எப்படி பாதுகாப்பு பலப்படும்.

இதெல்லாம் தாம் சுகபோகமாக வாழ்வதற்கு சொல்லுகின்ற காரணங்கள் தமது சுகபோக வாழ்க்கையை நியாயப்படுத்துகின்ற காரணங்கள்.

இதை ஏற்க முடியாது. மக்களும் ஏற்கமாட்டார்கள். வெளிநாடுகளில் இவர்களைவிடவும் பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ள தலைவர்கள் ஒரு வாகனத்தில்தான் பயணிக்கிறார்கள்.துவிச்சக்கர வண்டிகளில் பயணிக்கிறார்கள்.

எமது தலைவர்கள் சுகபோகத்தோடும் பெருமையோடும் வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள்.

மக்களிடம் செல்லும்போது பல வாகனக்ளுடன் செல்ல வேண்டும். அப்படி சென்றால்தான் தன்னை ஒரு பெரிய தலைவனாக மதிப்பார்கள் என்று அவர்கள் எண்ணுகிறார்கள்.

ஆனால்,மக்களின் பணத்தை இவ்வாறு வீண் விரயம் செய்கிறோமே என்று அவர்கள் ஒருபோதும் எண்ணியதில்லை.

இவர்களின் இவ்வாறான செயற்பாடுகள் காரணமாகத்தான் நாடு பொருளாதார வீழ்ச்சியை சந்தித்தது.மக்களின் வறுமை அதிகரித்தது வேலையின்மை அதிகரித்தது ஊழல்,மோசடிகள் அதிகரித்தன.

இவ்வாறான ஊழல்மிக்க ஆட்சி–ஊழல்மிக்க தலைவர்கள் இனியும் வேண்டாம் என்றுதான் நட்டு மக்கள் முடிவெடுத்து ஆட்சியைக் கவிழ்த்து புதியவர்களிடம் அதிகாரத்தை ஒப்படைத்துள்ளனர்.

இந்த புதியவர்கள் ஊழலை ஒழிப்பதற்காக –ஊழல் புரிந்தவர்களை தண்டிப்பதற்காக –கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை –சொத்துக்களை மீள கைப்பற்றுவதற்காக – வரி நிலுவையைத் திரட்டுவதற்காக மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் பிரமாதம்.

இந்த செயற்பாடுகளை தொய்யவிடாது முன்கொண்டு செல்வதற்காக மக்கள் அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும்.

2024 பாராளுமன்ற பொதுத் தேர்தலில் அதிக விருப்பு வாக்குகளைப் பெறுவதற்கு "புதுச் சுடர்" இல் விளம்பரம் செய்யுங்கள்!
+94 77 788 4883








# ஒழிக்கப்பட வேண்டிய போதைப்பொருள்

இன்று இளம் சமூதாயம் சீரழிவதற்கு முதல் காரணமாக இருப்பது போதைப்பொருள் பாவனையென்றால் அது மிகையாகாது.

பாடசாலை மாணவர்கள் சிறு வயதில் இருந்தே போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகின்றனர். கல்வியைத் துறந்துவிட்டு சீரழிகின்றனர்.

இதன் பாவனைக்குப் பணம் தேவையென்பதால் திருட்டு உள்ளிட்ட சமூக விரோத செயல்களில் ஈடுபடுகின்றனர்.இதனால் சிறு வயதிலேயே சிறை செல்கின்றனர்.

புதிய அரசிலாவது இந்த நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்.

அரசு நினைத்தால் எப்படிப்பட்ட குற்றச் செயல்களையும் முடிவுக்குக் கொண்டு வர முடியும்-பூஜ்ய மட்டத்துக்குக் கொண்டு வர முடியும் என்பதற்கு கடந்த ரணில் விக்ரமசிங்கவின் அரசு மேற்கொண்ட பாதாள மற்றும் போதை பொருள் வியாபாரிகளுக்கு எதிரான யுக்திய விசேட ஒப்பரேஷன் நிரூபிக்கிறது.

அப்போதையை பொலிஸ் அமைச்சர் டிரான் அலசின் உத்தரவின் பேரில் அப்போதையை பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் நடத்தி வந்த இந்த ஆட்டத்தால் பல பாதாள உலக சந்தேக நபர்கள்-தேடப்பட்டு வந்தவர்கள்-போதைப்பொருள் வியாபாரிகள் என பலர் கைது செய்யப்பட்டனர்.பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை பொலிஸார் கைப்பற்றினர்.

அந்த அரசு முன்னெடுத்திருந்த பல திட்டங்களில் மக்களுக்கு உடன்பாடு இல்லை. காரணம் அவை எல்லாம் பொருளாதாரரீதியாக மக்களை நசுக்கக்கூடியவை. ஆனால், இந்த யுக்திய ஆட்டம் மக்களுக்கு முக்கியமானது.மக்கள் விரும்புவது.

இந்த வேலைத்திட்டத்தின்போது கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் மக்களுடையவை .மக்களை போதைப்பொருளுக்கு அடிமனையாக்கி அவர்களின் பணத்தைப் பெற்று வாங்கப்பட்ட சொத்துக்களும்-பணக்காரர்களை மிரட்டி கப்பமாகப் பெறப்பட்ட சொத்துக்களுமே இவை.

இவை சட்டவிரோதமான சொத்துக்கள் என்று அடையாளம் காணப்பட்டே பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. உரிய விசாரணையின் பின் அந்த சொத்துக்கள் அபகரிக்கப்பட்ட சொத்துக்களாக இருந்தால் அவை உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

மிகுதி சொத்துக்கள் அரசுடமையாக்கப்பட வேண்டும்.அல்லது போதை பொருள் பாவனையால் பாதிக்கப்பட்டு புனர்வாழ்வளிக்கப்பட்டு வருபவர்களின் செலவுக்கு வழங்கப்பட வேண்டும். அதுதான் சரியானது. காரணம்,அவர்களை போதைக்கு அடிமையாக்கி அதன்மூலம் ஈட்டப்பட்ட சொத்துக்கள்தானே.

அனுரவின் அரசு இந்த செயற்பாட்டை தொடர வேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள். இல்லாவிட்டால் மீண்டும் பழைய இடத்துக்கே நிலைமை சென்றுவிடும். அதனால் எந்த நன்மையையும் இல்லை.

இதற்கு இறுதி முடிவு கட்டும் வரை-போதைப்பொருள் வியாபாரத்தை-பாதாள குழுக்களை முற்றாக ஒழிக்கும்வரை அக்ஸன் தொடர வேண்டும்,

அரசு மனது வைத்தால்-பொலிஸார் மனது வைத்தால் குறுகிய காலத்துக்குள் இதை ஒழித்துவிடலாம் என்பதை இந்த 6 மாத ஆட்டம் நிரூபிக்கிறது.

அரசுக்கு தேவையென்றால் தொடங்குதல், இல்லாவிட்டால் இடையில் நிறுத்திவிடுதல் என்பதுதான் இப்போதுவரையும் உள்ள நடைமுறை.

அதற்குக் காரணம் அரசின் சில அமைச்சர்களின்-எம்பிக்களின்-பொலிஸ் அதிகாரிகளின் கூட்டாளிகளாக இந்த போதை வியாபாரிகளும் பாதாள குழுக்களும் இருப்பதுதான்.

அவர்களின் அழுத்தம் காரணமாகவே ஒப்பரேஷன் இடையில் நிறுத்தப்படுகிறது.பின்னர் கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படுகிறார்கள். பழைய படிபோல் வர்த்தகம்-அடாவடி தொடர்கின்றன.

இந்த நிலைமை இனியாவது-அனுரவின் ஆட்சியிலாவது மாற வேண்டும்.நாட்டு மக்கள்-இளம் சமூதாயம் இந்த போதைப்பொருளால் சீரழிந்துகொண்டு செல்கிறார்கள்.

பல குடும்பங்கள் சீரழிந்து நடுத் தெருவுக்கு வருகின்றன.பணக்காரர்கள் பிச்சைக்காரர்களாக மாறுகின்றனர்.இந்த பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இந்த போதை பொருள் பாவனை மக்களுக்கு மேலும் சுமையாகும்.

ஆகவே,போதைப்பொருள் -பாதாள ஒழிப்பு நடவடிக்கையை வெறும் சில மாதங்காளுக்கு மட்டும் மட்டுப்படுத்தாது அவர்களை ஒழித்துக்கட்டும்வரை தொடர வேண்டும்.

முக்கியமாக,இவ்வாறான ஒப்பரேசனுகள்பற்றி முன்கூட்டியே அறிவிப்பதை பொலிஸார் நிறுத்த வேண்டும்.அது குற்றவாளிகள் தப்பிப்பதற்கு வழிவகுக்கும்.

**OCTOBER 2024 INTAKE**

## UK Endorsed Diploma Programs

- UK Diploma In Psychology and Counseling
- UK Diploma In Information Technology
- UK Diploma In Teacher Training
- UK Diploma In Business Management
- UK Diploma In Early Childhood Education
- UK Diploma In English

## TVEC Programs

- Certificate for Care Giver
- Certificate for Child Care Center Operations
- Diploma in Montessori and Early Childhood Education
- Diploma in Psychology and Counseling

## UK Qualified HND Programs

- HND (UK) in Psychology and Counseling
- HND (UK) In Information Technology
- HND (UK) In Teacher Training
- HND (UK) In Business Management
- HND (UK) In English

## Recognitions

City & Guilds Approved Centre

bcs The Chartered Institute for IT

BRITISH COUNCIL

IIC UNIVERSITY OF TECHNOLOGY

QUALIFI

Member of : FITIS FEDERATION OF IT INDUSTRY SRI LANKA

## TOP UP DEGREES

IAU INTERNATIONAL ASSOCIATION OF UNIVERSITIES · WHED World Higher Education Database · UGC RECOGNIZED · WES WORLD EDUCATION SERVICES APPROVED

- Bachelor's of Education
- BA in English
- Bachelor's of Psychology
- Bachelor's of Business Admin (BBA)

**APPLICATION CLOSING DATE**

**30th Oct 2024**

+94775 846 482

AMAZON COLLEGE Where Success Begins

**AMAZON COLLEGE & CAMPUS**

294, Level 1, Galle Road, Colombo-4.

+94112591110 / +94114386126

info@amazoncollege.lk

www.amazoncollege.lk

WHERE SUCCESS BEGINS 15TH YEARS ANNIVERSARY

# உலக சிறுவர் தினத்தைக் கொண்டாடிய HNB Finance












கடந்த ஆண்டுகளைப் போலவே, உலக சிறுவர் தின கொண்டாட்டங்களை HNB Finance PLC இந்த ஆண்டும் மிக பிரமாண்டமான முறையில் ஏற்பாடு செய்தது. உலக சிறுவர் தினத்துடன் இணைந்து, HNB Finance கிளைகள் மற்றும் தலைமை அலுவலக ஊழியர்களால் நடாத்தப்பட்ட கலைப் போட்டியின் இறுதிச்சுற்றைப் பிரதிநிதித்துவப் படுத்தும் 90 கலைச் சித்திரங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. இந்த நிகழ்வு HNB Finance தலைமை அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றதுடன், இதற்கு HNB Financeஇன் 'யாலு சிறுவர் சேமிப்புக் கணக்கு' பூரண அனுசரணை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

HNB Finance நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான திரு. சமிந்த பிரபாத் தலைமையில், சிறுவர் தின கொண்டாட்டக் கலைக் கண்காட்சி பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டதுடன், இந்நிகழ்விற்கு பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. மதுரங்க ஹீன்கெந்த மற்றும் HNB Financeஇன் சிரேஷ்ட முகாமைத்துவ உத்தியோகத்தர்கள், இறுதிச் சுற்றுக்கு தெரிவு செய்யப்பட்ட ஓவியங்களை உருவாக்கிய சிறுவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள், தலைமை அலுவலக ஊழியர்கள் குழு ஆகியோர் கலந்துகொண்டனர். நட்புசார்ந்த ஓவியங்களை வரைந்து வெற்றிபெற்ற சிறுவர்கள் வயது அடிப்படையில் HNB Finance இறுதிச் சுற்றுக்காக தெரிவு செய்ததுடன் கல்வி அமைச்சின் நுண்கலைகள் பாடத்தின் முன்னாள் ஆலோசகர் திரு. தயாவம்ச குமாசாரு அவர்களின் மேற்பார்வையில் ஓவியங்கள் தெரிவு இடம்பெற்றது.

HNB Finance நிறுவனம், ஓவியங்கள் மற்றும் வெற்றி பெற்ற ஓவியங்கள் மற்றும் குழந்தைகள் மத்தியில் இதற்கு பங்களித்த அனைத்து குழந்தைகளுக்கும் மதிப்புமிக்க பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்க ஏற்பாடு செய்துள்ளதுடன் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் புதிய யாலு சிறுவர் கணக்குகளை ஆரம்பிப்பதற்கான வாய்ப்பும் வழங்கப்பட்டது. அட்லஸ் நிறுவனமும் வெற்றியாளர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்க இணை அனுசரணை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# 'DIMO Care Camp' வெற்றிகரமாக நிறைவு




பெரும் போகத்திற்குத் தயாராகி வரும் விவசாயிகளுக்கு உதவும் வகையில் DIMO நிறுவனம் இலவசமாக இரண்டாவது தடவையாக முன்னெடுத்திருந்த 'DIMO Care Camp' உழவு இயந்திர சேவை முகாம் அண்மையில் வெற்றிகரமாக நிறைவு பெற்றதோடு, இதில் பெருமளவான உழவு இயந்திர உரிமையாளர்கள் பங்குபற்றியிருந்தனர். விவசாய நடவடிக்கைகளின் செயல்திறன் மற்றும் தரத்தை பேணுவதற்கு, விவசாய இயந்திரங்களின் முறையான பராமரிப்பு மிகவும் முக்கியமானதாகும். அந்த வகையில் இந்நாட்டின் விவசாயிகளுக்கு தமது பங்களிப்பை வழங்கும் நோக்கில் முன்னெடுக் கப்பட்ட இந்த இலவச சேவையில், எந்தவொரு வர்த்தகநாமத்தைச் சேர்ந்த அல்லது எந்தவொரு வகையான உழவு இயந்திரங்களுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டமை ஒரு விசேட அம்சமாகும்.

இவ்வருடம் நாட்டிலுள்ள முக்கிய விவசாய மாவட்டங்களை இலக்காகக் கொண்டு இந்த நிகழ்ச்சித்தொடர் முன்னெடுக்கப்பட்டது. அதற்கமைவாக மட்டக்களப்பு, வவுனியா, கிளிநொச்சி, மன்னார், திருகோணமலை, அநுராதபுரம், குருணாகல், பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களின் பல்வேறு பிரதேசங்களில் இந்நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

# ஆரங்காவ ஸ்ரீ தம்மாராம ஆரம்ப பாடசாலைக்கு கணனிகள்



ஹட்ச் நிறுவனம், இலங்கையில் டிஜிட்டல் அறிவை மேம்படுத்துவதில் அர்ப்பணிப்புடன் உள்ளது.

தனது அர்ப்பணிப்புக்கு அமைவாக, தனது நிறுவன சமூகப் பொறுப்புணர்வுச் செயற்பாடுகளின் ஒரு அங்கமாக, மினுவாங்கொடையிலுள்ள ஆரங்காவ ஸ்ரீ தம்மாராம ஆரம்ப பாடசாலைக்கு டெஸ்க்டொப் கணனிகளை அது வழங்கியுள்ளது. சர்வதேச எழுத்தறிவு தினத்தை யொட்டியதாக, காலத்திற்கு ஏற்ற இந்த முயற்சி, தொழில் நுட்பத்தினூடாக கல்விக்கு ஆதரவளிப்பதில், குறிப்பாக கிராமப்புற மற்றும் வசதிகள் குறைந்த சமூகங்கள் மத்தியில் ஆதரவளிப்பதில் ஹட்ச் நிறுவனத்தின் அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கின்றது.

நவீன கல்வியின் அத்திவாரமாக வேகமாக மாற்றம் கண்டு வருகின்ற, அத்தியாவசிய டிஜிட்டல் கருவிகளுக்கான அணுகலை மாணவர்களுக்கு வழங்கி, நகர மற்றும் கிராம கற்றல் சூழ்நிலைகளுக்கு இடையிலான இடைவெளியை நிரப்ப உதவுவதே இப்பங்களிப்பின் நோக்கம்.

# டாபர்ட் பாடசாலை தடகள சம்பியன்ஷிப் 2024 வெற்றிகரமாக நிறைவு




92ஆவது ரிட்ஸ்பரி சேர் ஜோன் டாபர்ட் சிரேஷ்ட தடகள சம்பியன்ஷிப் 2024 போட்டிகள் செப்டெம்பர் 30ஆம் திகதி முதல் ஒக்டோபர் 3ஆம் திகதி வரை கொழும்பு சுகததாஸ மைதானத்தில் நடைபெற்றன.

இந்த போட்டியில், நாட்டின் சிறந்த தடகள வீரர்கள் தமது திறன்கள் மற்றும் ஆற்றல்களை வெளிப்படுத்தியிருந்தனர். ரிட்ஸ்பரி அனுசரணையில் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போட்டி, இலங்கையின் விளையாட்டுகளை ஊக்குவிக்கும் வகையில் வருடாந்தம் நடைபெறும் நிகழ்வாக அமைந்திருப்பதுடன், தடகள சிறப்பையும், விளையாட்டு அம்சங்களையும் வெளிப்படுத்துவதாகவும் அமைந்திருந்தது. இலங்கையின் பல்வேறு பாடசாலைகளின் 5000 க்கும் அதிகமான தடகள வீரர்கள் பங்கேற்ற நிகழ்வாக இம்முறை போட்டி நடைபெற்றது. பெண்கள் பிரிவில் வத்தளை லைசியம் சர்வதேச பாடசாலை 182 புள்ளிகளைப் பெற்று வெற்றியீட்டியிருந்தது.

இதனைத் தொடர்ந்து, வத்தளை ஏ ரத்நாயக்க மத்திய கல்லூரி 147 புள்ளிகளையும், நீர்கொழும்பு ஆவே மரியா கன்னியர்மடம் 77 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர். ஆண்கள் பிரிவில், வென்னப்புவ, சென். ஜோசப்ஸ் வாஸ் கல்லூரி 117 புள்ளிகளைப் பெற்று சம்பியன்ஷிப் பட்டத்தையும், இரண்டாமிடத்தை கொழும்பு சென். பெனடிக்ட் கல்லூரி 77 புள்ளிகளுடனும், மூன்றாமிடத்தை நீர்கொழும்பு மாரிஸ் ஸ்டெலா கல்லூரி 74 புள்ளிகளுடனும் பெற்றுக் கொண்டன.

# VIMAN வீட்டுத் தொகுதியின் விற்பனையில் சாதனை



தொடர்மாடிக் குடியிருப்பின் கட்டுமானப் பணிகள் 2024 ஓகஸ்ட் 26ஆம் திகதி ஆரம்பிக்கப்பட முன்னர் அதன் விற்பனை மூலம் 4.2 மில்லியன் ரூபா பெறப்பட்டுள்ளது.
இது John Keells Properties நிறுவத்தின் குறிப்பிடத்தக்க அடைவாக அமைவதுடன், முதலீட்டாளர்கள் மற்றும் வீட்டை வாங்குவோரின் உறுதியான அக்கறையைக் கோடிட்டுக் காட்டுவதாகவும் அமைந்துள்ளது.
ஜா-எல VIMAN என்பது மற்றுமொரு குடியிருப்புத் தொகுதித் திட்டமல்ல இது, புறநகர் பகுதியில் இயற்கையின் அமைதியில் வாழக்கூடிய வகையிலான தனித்துவ வடிவமைப்பாகும். 6 ஏக்கர் நிலப்பரப்பு விஸ்தீரணத்தில் 65% திறந்த வெளிகள் மற்றும் வசதிகளுக்காக ஒதுக்கப்பட்டிருப்பதுடன், ஜா-எல VIMAN என்பது சாதாரண தொடர்மாடிக் குடியிருப்புக்கு அப்பாற்பட்டதாகும் தியான கூடம், சிறுவர்கள் விளையாட்டு இடம், வெளியக விளையாட்டுக் கூடம் மற்றும் சைக்கிள் ஓட்டம் மற்றும் நடைபாதைக்கான இடம் போன்ற 15ற்கும் அதிகமான வசதிகள் முழுமையான வாழ்க்கை அனுபவத்தை வழங்குவதை நோக்காகக் கொண்டவை.
இந்தத் திட்டத்தின் வெற்றி குறித்துக் கருத்துத் தெரிவித்த, துohn Keells Properties நிறுவனத்தின் ஆதனைத் துறையின் தலைவரும், John Keells குழுமத்தின் நிறைவேற்று பிரதித் தலைவருமான இனோக பெரேரா குறிப்பிடுகையில், "புதிய உலகத்தை உருவாக்குதல் என்ற எமது நோக்கத்துடன் பொருந்தும் வகையில் புறநகர் குடியிருப்பு சந்தையை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட John Keells Properties நிறுவனத்தின் முதலாவது முயற்சியே இதுவாகும். வீடுகள் மட்டுமல்ல, இயற்கையோடு இணக்கம், சூழல் உணர்வுள்ள வாழ்க்கை மற்றும் சமூக விழுமியங்கள் செழித்து வளரும் ஒரு வாழ்க்கை முறையை வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளது. ஜா-எல VIMAN என்பது குடியிருப்பு மாத்திரமல்ல, இயற்கையோடு இணக்கம், சூழல் உணர்வுள்ள வாழ்க்கை மற்றும் சமூக விழுமியங்கள் செழித்து வளரும் ஒரு வாழ்க்கை முறையை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட திட்டமாகும். நவீன வசதிகள் மற்றும் அமைதியான சூழல் ஆகியவற்றை சமநிலையுடன் வழங்கும் சரணாலயமாக இது அமையும்" என்றார்.

# Choice by AliExpress அறிமுகம்




நாட்டில் முன்னணி ஒன்லைன் (இணைய வழி) சந்தைப்படுத்தல் தளமாக விளங்கும் Daraz Sri Lanka, தனது தளத்தில் புதிய Choice தெரிவொன்றை அறிமுகப்படுத்துவதற்காக AliExpress Choice உடன் ஒத்துழைத்துச் செயற்படவுள்ளது.
இதன் மூலமாக கொள்வனவாளர்கள் தற்போது நவநாகரிகம் (கைக்கடிகாரங்கள், சூரிய ஒளிப் பாதுகாப்பு கண்ணாடிகள், ஆபரணங்கள், பேக் போன்றவை) ஆரோக்கியம் மற்றும் அழகு சார்ந்த பிரபலமான வகைகளில் 1 மில்லியனுக்கும் மேற்பட்ட உச்ச தரத்திலான தயாரிப்புக்களை தெரிவு செய்யும் வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.
வாடிக்கையாளர்கள் மத்தியில் பரிமாண மாற்றம் கண்டு வருகின்ற தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் 2023 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட AliExpress Choice ஆனது சிறந்த கொள்வனவு அனுபவத்திற்காக விசேடமாக தயாரிக்கப்பட்ட, மகத்தான பெறுமதி கொண்ட தயாரிப்புக்கள் மற்றும் மேம்பட்ட சேவைகளை வழங்குகின்றது.
Choice ஆனது தற்போது 50க்கும் மேற்பட்ட சந்தைகளில் பயனர்களுக்கு கிடைக்கப் பெறுகின்றது. இவ்வாறே இலங்கையிலும் Daraz இன் புதிய Choice topKiwahdJ பணத்திற்கான சிறந்த மதிப்பு, இலவச விநியோகம் மற்றும் 14 தினங்களுக்குள் அறவீடு இன்றி அவற்றை மீளத் திருப்புதல், ஆகியவற்றுடன் AliExpress Choice இல் கிடைக்கும் தெரிவுகள் அடங்கலாக, பல்வகைப்பட்ட தயாரிப்புக்களை வழங்குகின்றது. மிகவும் கூடுதலாக நாடப்படுகின்ற தயாரிப்புக்களை சிக்கனமான விலைகளுடன் வழங்கி, Daraz பயனர்களுக்கு மேம்பட்ட கொள்வனவு அனுபவத்திற்கு இக்கூட்டாண்மை உத்தரவாதமளிக்கின்றது.

# APT கண்டறிதலில் 25% அதிகரிப்பு

kaspersky

முயளிநசளமல'இன் உலகளாவிய ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுக் குழு (Global Research and Analytics Group - GREAT) 2024 இன் முதல் பாதியில் மேம்பட்ட அச்சுறுத்தல் (APT) கண்டறிதலில் 25மூ அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளது.
உலகளாவிய ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுக் குழு தனது உள் இயந்திர கற்றல் முறைகளைப் பயன்படுத்தி இதுபோன்ற ஆயிரக்கணக்கான அச்சுறுத்தல்களைக் கண்டறிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.
உலகளாவிய இணையத்தள அச்சுறுத்தல் தரவுகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் அரசாங்கம் மற்றும் நிதி நிறுவன மற்றும் தொலைத்தொடர்பு துறைகள் இவற்றைக் கண்டறிய முடிந்தது.
Random Forest மற்றும் TF-IDF போன்ற நுட்பங்கள் Kasperskyஇன் தீர்வுகளில் பயன்படுத்தப்படும் அதிக எண்ணிக்கையிலான இயந்திர கற்றல் மாதிரிகளை உருவாக்கப் பயன்படுத்தப்படுகின்றன. இந்த நுட்பங்கள் துல்லியமான அச்சுறுத்தல்களைக் கூட விரைவாகவும் சரியாகவும் கண்டறிய உதவுகின்றன. மேலும், இந்த கலவையானது பாரம்பரிய கண்டறிதல் அமைப்புகளால் புறக்கணிக்கப்படக்கூடிய சமரசத்தின் குறிகாட்டிகளை அடையாளம் காணும் வாய்ப்பை வழங்குகிறது, அதே நேரத்தில் மாற்றங்களை மிகவும் துல்லியமாக கண்டறிதல் மற்றும் அச்சுறுத்தல் கண்டறிதலில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் கொண்டுள்ளது.

# Hot 'N' Spicy ஆக மாறும் சனா

வளர்ந்து வரும் பதின்ம வயது கலைஞரான சனாவை தனது வர்த்தகநாம தூதுவர்களில் ஒருவராக இணைத்துக் கொண்டுள்ளதாக பிறிமா கொத்துமீ (Prima KottuMee) அறிவித்துள்ளது.
அந்த வகையில் வர்த்தக நாமத்தின் இளமையான நெறிமுறைகளுடன் முழுமையாக ஒத்துப் போகின்ற, இளமையான மற்றும் திறமையான கலைஞரான சனா, பிறிமா கொத்துமீ வர்த்தக நாமத்திற்கு ஒரு புதிய மற்றும் துடிப்பான ஆளுமையைக் கொண்டு வரவுள்ளார்.
இசை மீதான அவரது ஆர்வம், அனைவரையும் கவரும் அவரது




நடத்தை ஆகியவற்றுடன் இணைந்து, வர்த்தகநாமத்தின் Hot 'N' Spicy பண்புகளை வெளிப்படுத்த சனா சிறந்த தெரிவாக அமைகிறார். சனாவின் இசைப் பயணமானது அபாரமான பல்வேறு சாதனைகள் நிறைந்ததாகும். வசீகரிக்கும் குரல் மற்றும் அனைவரையும் கவரக் கூடிய ஆற்றல் காரணமாக பிரபலமாக விளங்கும் அவர், இலங்கையின் இசைத்துறையில் மிக விரைவாக தனக்கென்று ஒரு அங்கீகாரத்தை பெற்றுள்ளார்.

# வட மத்திய மாகாணத்தில் வலுவூட்டும் தீவா கரத்திற்கு வலிமை

தீவா கரத்திற்கு வலிமை மகளிர் தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டுத் திட்டம் ஆனது, Women in Management (WIM) மற்றும் Hemas Consumer Brands நிறுவனத்தின் முதன்மையான சலவை பராமரிப்பு வர்த்தகநாமமான தீவாவின் கூட்டு முயற்சியாகும்.
150 இற்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களின் பங்கேற்புடன் இடம்பெற்ற இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் 6ஆவது பிராந்திய நிகழ்வானது 2024 ஒக்டோபர் 07ஆம் திகதி அநுராதபுரத்தில் வெற்றிகரமாக நிறைவடைந்தது.
நுவரகம் பலாத்த மத்திய பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற இது தொடர்பான முழு நாள் கருத்தரங்கானது, தொழில் முயற்சியாளர்கள் சவால்களை எதிர்கொள்ளத் தேவையான அறிவு, திறன் மற்றும் தன்னம்பிக்கை ஆகியவற்றுடன் பெண் தொழில்முனைவோரை தயார்படுத்தியது.
வடக்கு, வடமேல், தென், ஊவா, மத்திய மாகாணங்களை உள்ளடக்கியவாறு இலங்கை முழுவதிலும் உள்ள பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களின் வெற்றிகரமான தொடராக இடம்பெற்ற இந்நிகழ்வானது, மற்றுமொரு மைல்கல்லாக அமைந்தது.
இந்த கருத்தரங்கின் போது, பங்கேற்பாளர்கள் வணிகப் பதிவு, நிதி முகாமைத்துவம், வாடிக்கையாளர் பராமரிப்பு, விலை வியூகங்கள், வர்த்தகநாம பிரபலப்படுத்தல் மற்றும் பொதியிடல் போன்ற அத்தியாவசிய தொழில் முனைவோர் திறன்கள் தொடர்பான அறிவைப் பெற்றனர். ஒன்லைன் சந்தைகளிலும் இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டதோடு, மிகவும் போட்டி நிறைந்த டிஜிட்டல் துறையில் சிறு வணிகங்களை மேம்படுத்துவதிலும் பெறுமதி வாய்ந்த நுண்ணறிவுகளை இது வழங்கியது.



# ஜனசக்தியின் புதிய கிளை




இலங்கையில் காப்புறுதித் துறையில் முன்னணி வகித்து வருகின்ற ஜனசக்தி ஆயுள் காப்புறுதி நிறுவனம், மத்துகமவில் தனது புதிய கிளையை பெருமையுடன் திறந்து வைத்துள்ளது. பல்வகைப் பட்ட ஆயுள் காப்புறுதி தீர்வுகள் மற்றும் சேவைகளை வாடிக்கையாளர்கள் இன்னும் கூடுதலான அளவில் அணுகக் கூடியதாக விசேடமாக வடிவமைத்து இக்கிளை அவர்களுக்கு வழங்குகின்றது. நிறுவனத்தின் பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான திரு. ரவி லியனகே மற்றும் பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரியான திரு. நிரஞ்சன் தங்கராஜா ஆகியோர் இந்த திறப்புவிழா நிகழ்வில் கலந்து சிறப்பித்துள்ளனர். நிறுவனத்தைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியமானதொரு படியாக அமைந்துள்ள இந்நிகழ்வில் அதன் சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகள் மற்றும் விருந்தினர்களும் கலந்து கொண்டனர்.

## Lanka சொகுசு ஹோட்டல் வசதி அறிமுகம்

ஜோன் கீல்ஸ் நிறுவனத்தினால் 1.2 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான முதலீட்டில் கட்டப்பட்ட Cinnamon Life at City of Dreams Sri Lanka சொகுசு ஹோட்டல், 2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் 15 ஆம் திகதி திறக்கப்படவுள்ளது.

இலங்கையில் தனியார் துறையின் மிகப்பெரியதும் மற்றும் நம்பிக்கைக்குரிய முதலீடாகவும் குறிப்பிடப்படக்கூடிய இந்த ஹோட்டல் ஆனது, வர்த்தகம், ஓய்வு மற்றும் பொழுதுபோக்கிற்காக தெற்காசியாவில் மிகவும் செல்வாக்கு மிக்க சுற்றுலாத் தலமாக நாட்டின் சுற்றுலாத் துறைக்கு புதிய திருப்புமுனையாக அமையும். 687 ஆடம்பர அறைகளைக் கொண்ட Cinnamon Life at City of Dreams Sri Lanka சொகுசு ஹோட்டலில், பால்ரூம்கள், high-tech நிகழ்வுகள் மற்றும் மாநாட்டு நிகழ்வுகள் போன்ற தனித்துவமான வசதிகளுடன், ஒரே நேரத்தில் வெவ்வேறு தளங்களில் 5,000 க்கும் மேற்பட்ட விருந்தினர்களை உள்ளடக்கவும் அவர்களுக்கான சேவைகளை பெற்றுக்கொள்ளவும் முடியும் என்பது சிறப்பம்சமாகும். சர்வதேச மாநாடுகள் மற்றும் நவீன



வசதிகளுடன் கூடிய பெரிய அளவிலான நிகழ்வுகளை கொழும்பில் மிகப்பெரிய நிகழ்வு அரங்காக ஏற்பாடு செய்யும் வசதியை வழங்குவதால், உலகளாவிய MICE சுற்றுப்பயணங்களுக்கான முன்னணி இடமாக இருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

ஹோட்டலுக்கு வரும் விருந்தினர்கள் அனைவருக்கும் சுவையான உணவு மற்றும் பானங்களை வழங்குவதற்காக 250 சமையல் கலை நிபுணர்களுடன் 1,500 க்கும் மேற்பட்ட சேவை நிபுணர்களைக் கொண்ட குழு அர்ப்பணிப்புடன் செயற்படும். இங்கே, சுற்றுலாப் பயணிகளுக்கு எந்தவொரு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உணவு வகைகளின் சுவையான அனுபவத்தைப் பெறுவதற்கான வாய்ப்பும் உள்ளதுடன், குறிப்பாக chic French bistroவிலிருந்து American grill வரை..

அதுமட்டுமின்றி, ஆடம்பர முறையில் உருவாக்கப்பட்ட ஷாம்பெயின் மற்றும் கொக்டெய்ல் பார் ஆகியவற்றுடன் தங்களுக்குப் பிடித்த வைன் (Wines) வகைகளையும் தேர்ந்தெடுக்கும் பார் வசதிகள் மூலம் மறக்க முடியாத அனுபவத்தை பெற்றுக்கொள்ளவும் முடியும்.

## கவர்ச்சிகரமான பங்குலாபத்தை பிரகடனம் செய்துள்ள அமானா





அமானா வங்கி தனது தொடர்ச்சியான ஏழாவது வருடாந்த பங்கிலாப பிரகடனத்தை அறிவித்துள்ளது. இதுவரை வழங்கப்பட்ட பங்கிலாப பெறுமதிகளில் உயர்ந்த பெறுமதி இதுவாக அமைந்திருப்பதுடன், 2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்த பங்கிலாப பெறுமதியுடன் ஒப்பிடுகையில் ஏறத்தாழ இரு மடங்காக அமைந்துள்ளது.

இம்முறை ரூ. 661 மில்லியனை பங்கிலாபமாக வழங்க முன்வந்துள்ளது. பங்கொன்றுக்கு ரூ. 1.20 வீதம் இடைக்கால பணப் பங்கிலாபத்தை தனது பங்குதாரர்களுக்கு வழங்குவதுடன், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் மேற்கொள்ளப் பட்டுள்ள பிந்திய அறிவித்தலினூடாக, 2018 ஆம் ஆண்டு முதல் வங்கியினால் பிரகடனம் செய்யப்பட்ட பங்கிலாபங்களின் மொத்தப் பெறுமதி ரூ. 2 பில்லியனை விட உயர்வானதாக அமைந்துள்ளது. 2024 செப்டெம்பர் 30 ஆம் திகதியன்று, வங்கி 551,125,746 சாதாரண பங்குகளை வழங்கியிருந்தது.



## மீள் நிரப்பல் தொகுதிகளை அதிகரிக்கும் யூனிலீவர் ஸ்ரீ லங்கா

யூனிலீவர் ஸ்ரீ லங்கா நிறுவனமானது, Vega Innovations மற்றும் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பு (USAID) ஆகியவற்றுடன் இணைந்து, மீள் நிரப்பக்கூடிய தொகுதிகளின் பயன்பாட்டை அதிகரிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

Vega Innovations இன் UFill திட்டத்தின் ஒரு அங்கமான இந்த நிலையங்கள், சலவைத் திரவங்கள் மற்றும் ஷம்புக்கள் போன்ற யூனிலீவர் தயாரிப்புகளை மீள் நிரப்புவதற்கான செலவு குறைந்த வழிகளை நுகர்வோருக்கு வழங்கும் அதே நேரத்தில், ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக் பொதியிடலில் தங்கியிருப்பதை குறைக்கிறது. ருகுடைட திட்டமானது, 2027 ஆம் ஆண்டளவில், 128 மெட்ரிக் தொன் பிளாஸ்டிக் கழிவுகள் இலங்கையின் குப்பைக் கிடங்குகளில் சேர்வதைத் தடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. புதிய பொதிகளை கொள்வனவு செய்வதற்குப் பதிலாக மீள் நிரப்புவதன் மூலம் 20-30% வரையான குறைந்த செலவில் நுகர்வோர் பயனடைவார்கள். USAID இன் சமுத்திர பிளாஸ்டிக் குறைப்பு நடவடிக்கையானது, மூலோபாய ரீதியான மற்றும் தொழில்நுட்ப ரீதியான உதவி மூலம் இந்த திட்டங்களுக்கு ஆதரவளிக்கும்.

Vega Innovations தலைமையகத்தில் இடம்பெற்ற, இந்த கூட்டாண்மையை நடைமுறைப்படுத்தும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடல் நிகழ்வானது, இலங்கை முழுவதும் பிளாஸ்டிக் கழிவுகளை குறைக்கும் முயற்சிகளில் முக்கிய மைல்கல்லாகும்.

இது யூனிலீவர் மற்றும் Vega Innovations ஆகியவற்றின் தற்போதைய வலையமைப்பான கொழும்பு கோட்டை புகையிரத நிலையம், சேவா வனிதா பட்ஜட் மையம் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகள் போன்ற தற்போதுள்ள மீள்நிரப்பு நிலையங்களின் வலையமைப்பை வலுப்படுத்துவதோடு, நாடு முழுவதும் அதனை விரிவாக்குவதற்கான திட்டங்களை உள்ளடக்கியுள்ளது.